பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 20 திங்கட்கிழமை 03.05.2021 கதிர் 47

## கொரோனாவால் மேலும் 8 பிரதேசங்கள் முடக்கம்!

கொழும்பு உட்பட 5 மாவட்டங்களில் மேலும் 8 பிரதேசங்கள் இன்று காலை 6 மணி முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் பாதுக்க பொலிஸ் பிரிவிலுள்ள உக்கல்ல கிராம சேவகர் பிரிவும், கம்பஹா மாவட்டத்துக்குட்பட்ட வத்தளை பொலிஸ் பிரிவிலுள்ள அஸ்விஸ் வத்த கிராம சேவகர் பிரிவு, களுத்துறை

☞2

# நாம் ஆட்சியில் இருந்தபோதெல்லாம் ஊடக சுதந்திரத்தைப் பாதுகாத்தோம்!

## பிரதமர் மஹிந்த செய்தி

நாம் அதிகாரத்தில் இருந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் தகவல் அறியும் உரிமையையும், ஊடக சுதந்திரத்தையும் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடக சுதந்திர தினத்தையொட்டி இன்று வெளியிட்டுள்ள செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

☞2



## யாழில் ஊடக சுதந்திர தின நிகழ்வு; கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி!





யாழ்ப்பாணம், மே 03

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு சர்வதேச ஊடக சுதந்திர தினமான இன்று யாழ். ஊடக அமையத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, மலர் தூபி இந்த அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

☞2

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 4 ஆயிரத்து 875 பேர் சிக்கினார்கள்




முகக்கவசம் அணியாமை உட்பட தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 215 பேர் கடந்த 24 மணிநேரத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அதேவேளை, தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகள் நடைமுறைக்கு வந்த பின்னர், கடந்த ஒக்டோபர்

☞2

## காங்கேசன் கடற்கரைப் பகுதியில் 183 கிலோ கஞ்சா எரித்து அழிப்பு!





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.03

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை கடற்கரைப் பகுதியில் இருந்து 183 கிலோ கஞ்சா பொதிகள் இன்று மீட்கப்பட்டு எரிக்கப்பட்டன.

இந்தக் கஞ்சா பொதிகளை எடுத்து வந்தவர்கள் காங்கேசன்துறை கடற்கரையில் அவற்றைக் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

காங்கேசன்துறை கடற்படையினரால் அவை அவதானிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டன.

58 பொதிகளாக தயார்

☞2

## தொற்றாளர்கள் வீடுகளில் இருந்தால் 1906 இற்கு உடனடியாக அறிவிக்கவும்

### மக்களிடம் இராணுவத் தளபதி வேண்டுகோள்



கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் வீடுகளில் இருந்தால் அது தொடர்பில் உடன் அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதற்காகத் துரித தொலைபேசி இலக்கமும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

1906 என்ற துரித இலக்கத்துக்கு அழைத்து, கொரோனாத் தொற்றாளர் குறித்த தகவல்களைத் தருமாறு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா,

☞2

## சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சும் திலும் அமுனுகம வசம்

சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சராக திலும் அமுனுகம இன்று பதவியேற்றார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் அவர் பதவியேற்றுக்கொண்டார்.

இந்தப் பதவியேற்பு நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

திலும் அமுனுகம வாகன ஒழுங்குபடுத்தல், பஸ் போக்குவரத்து சேவைகள், ரயில் மற்றும் மோட்டார் வாகன

☞2



## கொரோனாவை ஒழிக்க இலங்கைக்கு உதவுங்கள்

### ரஷ்யாவிடம் சஜித் கோரிக்கை



இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் யூரி மதேரி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை இன்று சந்தித்தார்.

இருவருக்கும் இடையிலான சந்திப்பு எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

☞2

### உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்:

## ஹேமசிறிக்கும் பூஜிதவுக்கும் எதிராக 800 குற்றச்சாட்டுக்களின் கீழ் வழக்கு!



முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராக 800 குற்றச்சாட்டுக்களின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பிலேயே இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய சட்டமா அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

☞2

## சீன வெளிவிவகார அமைச்சர் அடுத்த மாதம் இலங்கைக்கு!

கொழும்பு, மே 03

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி அடுத்த மாதம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

சீன பாதுகாப்பு அமைச்சர் கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் பேச்சு நடத்திய அதேவேளை, பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த இரு நாடுகளும் ஒப்புக்கொண்டன.

இந்நிலையில், வெளிவிவகார அமைச்சர் வாங் தன்னுடைய பிராந்திய பயணத்தின் ஒரு பகுதியாக இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

கடந்த வாரம் இலங்கை, பங்களாதேஷ், நேபாளம், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுடன் இடம்பெற்ற மெய்நிகர் சந்திப்பொன்றில் அவர் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தார்.

இந்தச் சந்திப்பில் கொரோனாவைக் கட்டுப்படுத்துதல் மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஒத்துழைப்பு குறித்து அவர் உரையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் ஊடக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் பெருந்தொற்று நோயான கொரோனாவால் உயிரிழந்தவர்களும் நினைவுகூரப்பட்டனர். கொரோனோப் பெருந்தொற்றிலிருந்து மக்கள் மீண்டு வரவேண்டும் எனவும் இதன்போது பிரார்த்திக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனோத் தொற்றுக் காரணமாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, மட்டுப்படுத்தப் பட்டவர்களுடன் குறித்த நிகழ்வு இடம் பெற்றது.

## நாம் ஆட்சியில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

சர்வதேச ஊடக சுதந்திர தினமான இன்று மக்களின் தகவல் அறியும் உரிமையை உறுதிசெய்வதற்காக இரவு - பகலாக அயராது உழைக்கும் அனைத்து ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடக வியலாளர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தகவல் தொடர்பு தற்போது உலகில் மிக வேகமாக முன்னேறிவரும் துறைகளில் ஒன்றாக மாறியுள்ளது. கடந்த சில தசாப்தங்களில் பல்வேறு ஊடகங்களின் ஊடாக தகவல்கள் பொதுமக்களை சென்றடையும் நடவடிக்கை துரிதப்படுத்தப் பட்டது.

எனினும், சுயாதீனமான மற்றும் பொறுப்பான ஊடக பாவனையே காலத்தின் தேவையாகும். முறையான ஊடக பயன்பாட்டின் மூலமே மக்களின் தகவல் அறியும் உரிமை பாதுகாக்கப்படுகின்றது. அதற்காகப் பணியாற்றுவது அனைவரதும் பொறுப்பும், கடமையுமாகும் என நான் நம்புகின்றேன்.

இந்த நாட்டின் ஊடக சுதந்திரம் கடுமையாகப் பாதிக்கப்பட்ட விசித்திரமான காலங்களை நாம் நினைவுபடுத்தத் தேவையில்லை. நாம் அதிகாரத்தில் இருந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் தகவல் அறியும் உரிமையையும், ஊடக சுதந்திரத்தையும் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் என்பதை உங்களுக்கு நினைவூட்டுகின்றேன்.

முழு உலகமும் கொரோனாத் தொற்று நிலைமையால் பாதிக்கப்பட்டுள்ள இந்தச் சூழ்நிலையில் 'தகவல்கள் பொதுமக்களின் நலனுக்கானது' எனும் தொனிப்பொருளில் சர்வதேச ஊடக சுதந்திர தினத்தைக் கொண்டாடுவது காலத்துக்கு உகந்ததாகும்.

நாடு என்ற ரீதியில் இந்தத் தொற்று நோயை எதிர்கொண்டு, அதனை இல்லாதொழிக்கும் செயற்பாட்டில் பொதுமக்களைத் தெளிவுபடுத்தி, உயிராபத்தையும் பொருட்படுத்தாது ஊடகவியலாளர்கள் நிறைவேற்றும் இந்த உன்னத செயற்பாட்டையும், அர்ப்பணிப்பையும் அரசு எப்போதும் பாராட்டும்.

அறிவை ஆயுதமாகக் கொண்ட ஊடகவியலாளர்களின் தொழில் வளர்ச்சிக்காகவே கல்வி புலமைப்பரிசில்கள் மற்றும் ஊடக உபகரணங்களை வழங்குவதற்கான எமது நடவடிக்கை எதிர்காலத்திலும் செயற்படுத்தப்படும்.

துல்லியமான செய்திகளை அறிந்து கொள்வதற்கான மக்களின் உரிமையைப் பாதுகாத்து, நாட்டின் ஒட்டுமொத்த சமூக, கலாசார மற்றும் பொருளாதார அபிலாஷைகளை அடைவதற்கு ஊடக சுதந்திரத்தைப் பயன்படுத்துமாறு அனைத்து ஊடகவியலாளர்களிடமும் கேட்டுக்கொள்கின்றேன். - என்றுள்ளது.

## கொரோனாவால் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தில் பானதுறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாரம்பிட்டிய, பின்வத்த ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் திஸ்ஸ வீரசிங்கம் சதுக்கம் கிராம சேவகர் பிரிவும், நுவரெலியா மாவட்டத்தில், ஹங்குராங்கெத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரத்மெட்டிய கிராம சேவகர் பிரிவும் இன்று காலை முதல் தனிமைப்படுத்தப் பட்டுள்ளன.

## தனிமைப்படுத்தல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் 30ஆம் திகதி முதல் இதுவரை அந்தச் சட்டத்தை மீறிய 4 ஆயிரத்து 875 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவர்களில் பலருக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.

## சமூக பொலிஸ் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழில்துறை இராஜாங்க அமைச்சராகவும் செயற்பட்டு வருகின்றார்.

## தொற்றாளர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## காங்கேசன் கடற் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட கஞ்சாவை சம்பந்தப்பட்டோர் கடற்கரையில் போட்டுவிட்டுத் தப்பிச் சென்ற சமயமே கடற்படையினரால் அவை கைப்பற்றப்பட்டன.

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்டவை எனக் கருதப்படும் இந்தக் கஞ்சாப் பொதிகளை தற்போதைய கொரோனா அச்ச காலத்தில் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துவதில் உள்ள சுகாதார அச்சம் காரணமாக அந்த இடத்திலேயே அவை தீ இட்டப்பட்டு அழிக்கப்பட்டன.

## கொரோனாவை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பில் உலக நாடுகள் எதிர்கொண்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளுக்கான மருத்துவ உபகரணங்களை வழங்குவதில் ரஷ்யா இலங்கைக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக்கொண்டார்.

இலங்கையில் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பது குறித்து தாம் கவனம் செலுத்துவதாக ரஷ்யத் தூதுவர் இதன்போது தெரிவித்தார்.

# யாழ்ப்பாணம் வர்த்தகர்கள் பலரிடமும் காப்புறுதி நிறுவன பெயரில் நிதிமோசடி

லோகதயாளன்.

யாழ்ப்பாணம், மே 04

யாழ்ப்பாணத்தில் காப்புறுதி நிறுவனத்தின் பெயரில் வர்த்தகர்கள் பலரிடம் இருந்து பெரும் தொகை நிதி மோசடிகள் இடம்பெறுகின்றன..

யாழ்ப்பாணம் வர்த்தகர்கள் வங்கிகளில் கடன் பெற்றபோது கடன் பெற்றமைக்காக மேற்கொள்ளப்படும் ஒரு தடவையிலான காப்புறுதி விவரத்தை வைத்து உங்கள் பெயரில் இன்ன காலத்தில் காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. அதற்காக இந்தளவு பணம் செலுத்தப்பட்டுள்ளது. செலுத்தப்பட்ட பணத்தை மீளப் பெறமுடியும் அல்லது காப்புறுதியை தொடர முடியும் எதனை மேற்கொள்ள விரும்புகின்றீர்கள் தொடர விரும்பினால் மாதாந்தம் பணம் செலுத்த வேண்டும் கணக்கை மூடி பணத்தை மீளப் பெறுவதற்காக ஒரு தடவை மட்டும் குறிப்பிட்டளவு பணம் செலுத்த வேண்டும் என ஒரு தொகைப் பணம் 25 ஆயிரம் ரூபாவில் இருந்து 65 ஆயிரம் ரூபா வரையில் கோருகின்றனர்.

இவ்வாறு வைப்பிடக் கோரும் வங்கிக் கணக்கு ஓர் சம்பத் வங்கி ஒன்றின் கணக்கு இலக்கத்திற்கு வைப்புச் செய்யுமாறே கோரப்படுகின்றது. அவ்வாறு வைப்புச் செய்யப்படும் கணக்கு கொழும்பில் உள்ள சூதாட்ட விடுதியின் கணக்கு இலக்கம் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் மோசடி நபர்கள் உரியவரின் தே.அ.அட்டை இலக்கம், கணக்கு இலக்கத்தை கொண்ட சிட்டை ஒன்றினையும் வர்த்தகர்கள் கடன் பெற்ற காலம் என்பன சரியாக குறிக்கப்பட்ட சிட்டை அனுப்புவதனாலேயே தாம் நம்பி பணத்தை வைப்பிட்டதாக ஏமாற்றப்பட்ட வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

# வன்னில எத்தோ தாக்கல் செய்த மனு ஜூலை மாதம் விசாரணைக்கு

ஆதிவாசிகளின் பூர்வீக காணிகளை கையகப்படுத்தி முன்னணி நிறுவனங்களுக்கு சோளச்செய்கை மேற்கொள்வதற்காக வழங்கப்படுவதை உடனடியாக நிறுத்துவதற்கு உரிய உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னில எத்தோ தாக்கல் செய்துள்ள மனுவை ஜூலை மாதம் 13 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த மனு நேற்று (திங்கட்கிழமை) மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் அர்ஜுன ஒபேசேகர மற்றும் மாயா துன்ன கொரய ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுற்றாடல் அமைச்சின் செயலாளர், வனஜீவராசிகள் அமைச்சர், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@
gmail.com
தொலைபேசி
இலக்கம்-
076 443 8622

## ஹேமசிறிக்கும் பூஜிதவுக்கும் எதிராக ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களுக்கு எதிரான வழக்குகள் இரண்டு விசேட நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட வுள்ளன எனவும் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஹேமசிறி பெர்னாண்டோ, பூஜித ஜயசுந்தர ஆகியோர் மீது கொலை மற்றும் கொலை முயற்சி உட்பட 800 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான தகவல்களை அறிந்திருந்த நிலையிலும், தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வில்லை என்றும் இவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# ஊடகப் பிரதிக்ஞை

இன்று சர்வதேச ஊடக சுதந்திர தினம்.

ஐ.நா. பொதுச் சபையின் தீர்மானத்துக்கு அமைய 1993 ஆம் ஆண்டு முதல் இந்தத் தினம் உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக் கப்படுகின்றது.

ஒவ்வொரு வருடமும் ஒரு மகுட வாக்கியத்தின் கீழ் இது அனுஷ் டிக்கப்படுகின்றமை வழமை.

இந்த வருடத்துக்குரிய வாக்கியம் சற்று வித்தியாசமானது. வழமையாக ஊடகத்துக்காக – ஊடக சுதந்திரத்துக்காக – குரல் எழுப்பும் மகுட வாக்கியங்களே முக்கியத்துவம் பெறும்.

ஆனால், இம்முறை ஊடகத்தின் பொறுப்பை – கடமையை – ஊடகத் தரப்புக்கு உணர்த்தும் விதத்தில் தலைப்பு அமைக்கப்பட்டி ருப்பது குறிப்பிடத்தக்கது.

"Information as a public good" ('தகவல்: பொதுமக்கள் நலன் சார்ந்து') என்பது இம்முறை மகுட வாக்கியமாக அமைந்துள்ளது.

ஊடகங்களின் முக்கிய கடப்பாடு தகவல்களை – புதினங்களை – செய்திகளை – மக்களுக்கு எடுத்துச் செல்வதாகும். எடுத்துச் செல்லும் அத்தகவல்கள் பொதுமக்கள் நலன் சார்ந்தவையாக அமைய வேண்டும் என்பது ஊடகங்களின் கடப்பாட்டை உணர்த்தும் ஒரு முக்கிய அம்சமாகின்றது.

*"இந்த வருட ஊடக சுதந்திர தினத்துக்கான மகுட வாசகம் 'தகவல்: பொதுமக்கள் நலன் சார்ந்தது' என்பதாகும். அது உறு திப்படுத்தப்பட்ட, நம்பகத்தன்மை மிக்க தகவல்களின் முக்கியத் துவத்தை சர்ச்சைக்கு அப்பால் வலியுறுத்தும் விடயமாகும். தவ றான மற்றும் தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கங்களைக் கையாள் வதிலும் அவற்றை ஒட்டிய தகவல்களைத் தயாரிப்பதிலும் வெளி யிடுவதிலும் சுயாதீன மற்றும் தொழில்முறை ஊடகவியலாளர்க ளின் முக்கிய பொறுப்பு, கவனம் போன்றவற்றை இந்த மகுட வாக் கியம் வலியுறுத்துகின்றது."* – என்று யுனெஸ்கோ அமைப்பின் செயலாளர் நாயகம் ஒட்றி அசௌலி இன்றைய ஊடக சுதந்திர தினத்தை ஒட்டி வெளியிட்ட செய்தியில் தெரிவித்திருக்கின்றமை கவனிக்கத்தக்கது.

1991 இல் நமீபியாவின் வின்டோக் நகரில் நடந்த யுனெஸ் கோவின் உயர் மாநாட்டில்தான் சர்வதேச ஊடக சுதந்திர தினம் அனுஷ்டிக்கப்படும் யோசனை முகிழ்ந்தது.

முப்பது ஆண்டுகள் கழித்து நமீபியாவின் அதே வின்டோக் நகரில் கடந்த 29 ஆம் திகதி முதல், இன்று மே 3 ஆம் திகதி வரை சர்வதேச ஊடக சுதந்திரத்துக்கான பூகோள மாநாடு யுனெஸ்கோ ஏற்பாட்டில் நடந்து வருகின்றது. அதன் இறுதி நாள் இன்று.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக மதிக்கப்படுவது ஊடகத்துறை. அது சுதந்திர, சுயாதீன, பொறுப்புள்ள ஊடகத் துறையாக இருக்க வேண்டும்.

நீதித்துறை, நிறைவேற்றதிகாரத்துறை, சட்டவாக்கத்துறை ஆகிய மூன்றும் ஜனநாயகத்தின் அடிப்படை என்றால் அவை சரியாக இயங்குகின்றனவா என்பதை உறுதிப்படுத்தும் 'செக் பொயின்ற்' ஊடகத்துறை எனலாம். அதனால்தான் ஜனநாயகத் தின் காவல் நாய் என்றும் ஊடகத்துறை வர்ணிக்கப்படுகின்றது.

மேற்படி மூன்று துறைகளின் எல்லைமீறிய செயற்பாடுகள், அடக்குமுறைகள், அட்டூழியங்கள், அடாவடித்தனங்கள், நீதி முறையற்ற நடவடிக்கைகள், ஊழல்கள், மோசடிகள் ஆகியவற்றை மட்டுமல்லாமல், இந்த முறையற்ற செயற்பாடுகளினால் பாதிக் கப்படும் தனி நபர்கள் மற்றும் பிற தரப்புகளின் அவலங்கள், பாதிப்புக்கள், இழப்புகள் போன்றவற்றையும் உலகத்தின் முன் அம்பலப்படுத்துவதன் மூலம் நீதியை நிலைநாட்டுவதற்கு அரும் பணியாற்றுவதே ஊடகத்துறையின் பிரதான பங்குபணியாகும்.

இலங்கை ஊடகத்துறையைப் பொறுத்தவரை – குறிப்பாகத் தமிழ் ஊடகத்துறையைப் பொறுத்தவரை – இந்த விடயத்தில் உலகின் பிற ஊடகங்களுக்கு நிகரான பங்களிப்பை அது வழங்கி வந்திருக்கின்றது என்றால் மிகையாகாது.

உண்மையை அம்பலப்படுத்தி, வெளிப்படுத்தி, நிலை நிறுத்துவதற்காகப் பல தியாகங்களைச் செய்தது நமது தமிழ் ஊடகத்துறை. நமது ஊடக நண்பர்கள் பலர் தங்கள் உயிர்களையே இதற்காக ஆகுதியாக்கியிருக்கின்றார்கள். பேரிழப்புகளைச் சந் தித்திருக்கின்றார்கள். தியாகங்களைப் புரிந்திருக்கின்றார்கள். 'பயங்கரவாதிகள்' பட்டத்தைச் சுமந்திருக்கின்றார்கள்.

2015 இற்கு முற்பட்ட இருண்ட காலத்தில் தமிழ் ஊடகத்துறை சுமந்த வலிகளும், பாதிப்புகளும், நெருக்கடிகளும், எழுத்துக்க ளும் சொல்லில் அடங்காதவை.

ஆனால், தமிழ் ஊடகத்துறையின் பேனா, மோசமான யுத்த அச்சுறுத்தல்கள், கொடூரப் போர் அவலங்கள், குரூரமான அடக்குமுறைகள் போன்றவற்றுக்கு அஞ்சாமல் நிமிர்ந்து நின்று தனது கடமையை ஆற்றியமை கடந்த கால வரலாறு.

மீண்டும், அதேபோன்ற இருண்ட காலத்துக்குள் – அடக்குமுறை யுகத்துக்குள் – நாடு பிரவேசிக்கத் தொடங்கியிருக்கும் இச் சம யத்தில் இந்த சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை எதிர்கொள்கின் றோம்.

முன்னைய நெருக்கடி காலத்தில் பணியாற்றியமை போன்று இப்போதும் எத்தகைய அழுத்தம், இக்கட்டு வரினும் சத்தியத்தின் பால் நேர்மையாக நின்று, உண்மையைத் துணிச்சலுடன் எடுத் துரைப்போம் என்ற எங்கள் பேனாவின் மீதான நீதியை இன்றைய தினத்தில் பிரதிக்ஞையாக – சத்தியமாக – சபதமாக – செய்து கொள்வோம்!

# இலங்கைத் தமிழர் இனப் பிரச்சினைக்கு தீர்வு வழங்க ஸ்டாலின் உதவவேண்டும்

கொழும்பு, மே 03

**இலங்கையில் புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினைக்குத் திராவிட முன்னேற் றக் கழகத்தின் தலைவர் மு.க ஸ்டாலின் தீர்வை வழங்க ஒத்துழைக்க வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரு மான வே.இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.**



தமிழக சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளை பின்தள்ளி தி.மு.க. அமோக வெற்றி பெற்றுள்ளது.

தி.மு.க. வெற்றி பெற்றதால் புதிய தமிழக முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் தெரிவாகியுள்ளதுடன் அவர் எதிர்வரும் 6 ஆம் திகதி முதலமைச்சராகப் பதவியேற்பார் எனத் தெரி விக்கப்படுகின்றது.

இந்த நிலையில் ஸ்டாலினின் வெற்றிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து இராதாகிருஸ் ணன் ஊடகங்களிடம் மேற்கண்ட விடயத்தை கூறியுள்ளார்.

மேலும் திராவிட முன்னேற்றக் கழகத் தின் தலைவர் மு.க.ஸ்டாலின் இரு நாட்டு மீனவர் பிரச்சினைக்கும் நிரந்தர தீர்வு வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தி.மு.கவின் வெற்றி இலங்கைத் தமிழர்களுக்கு அர்த்தமுள்ள வெற்றியாக அமையும் என எதிர்பார்ப்பதாகவும் வே.இராதாகிருஷ்ணன் மேலும் தெரிவித் துள்ளார்.

# மோட்டார் போக்குவரத்து சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் நாராஹென்பிட்ட மற்றும் வேரஹெர காரியாலயங்க ளின் ஊடாக வழங்கப்படும் சேவை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட் டுள்ளன.

சுகாதாரப் பிரிவு வழங்கியுள்ள வழிமுறைகளுக்கு அமைவாக குறித்த அலுவலகத்தால் முன்னெடுக்கப்படும் பணிகள் ஒரு வார காலத்துக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளன.

முற்பதிவு செய்து கொண்ட சகல பதிவுகளும் இதன் மூலம் ரத்துச் செய்யப்பட்டுள்ளன எனவும் மோட் டார் போக்குவரத்துத் திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது.

# தனிமைப்படுத்தலை மீறிய 215 பேர் கைதாகினர்

கொழும்பு, மே 03

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 215 பேர் இன்று (திங்கட்கிழமை) காலை 06 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தி யாலங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரி வித்தார்.

அதன்படி, இதுவரையில் தனிமைப் படுத்தல் சட்டத்தை மீறிய 4 ஆயித்து 857 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

2020 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் இந்த நபர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரி வித்தார்.

# புத்தர் சிலை உடைப்பு நபர் ஒருவர் கைது

## காங்கேசன்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே.03

புத்தர் சிலையை உடைத்த குற்றச்சாட்டில் ஒருவரை காங்கேசன்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காங்கேசன்துறை நல்லிணக்கபுரத்துக்கு அண்மையில் இந்தச் சம்பவம் இடம்பெற் றுள்ளது.

காங்கேசன்துறை கடற்படை வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் மதுபோதையில் புத்தர் சிலையை உடைத்தார் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.



சந்தேக நபர் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

# சட்டவிரோதமாக வெட்டப்பட்டது மாடு; ஒருதொகுதி இறைச்சி மன்னாரில் பறிப்பு

மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதி காரிப் பிரிவில் உள்ள உயிலங்குளம் பகுதி யில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை அனுமதி இன்றி வீட்டில் வைத்து மாடு ஒன்றை வெட்டி இறைச்சிக் கடையில் வைத்து விற்பனை செய்ய முயன்ற நிலையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் குறித்த இறைச்சி மீட்கப் பட்டுள்ளது என மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ரோய் பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதி காரிப் பிரிவில் உள்ள உயிலங்குளம் பகுதி யில் மாட்டு இறைச்சி விற்பனை நிலையத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த சட்ட விரோ தமான முறையில் வெட்டப்பட்ட ஒரு தொகுதி மாட்டு இறைச்சியை சுகாதாரப் பரிசோதகர்கள் மீட்டுள்ளனர்.

பொதுச் சுகாதார மேற்பார்வை பரிசோதகர் கே.சி. வின்சன் மற்றும் உயிலங்குளம் பொது சுகாதாரச் பரிசோதகர் ரூபன் றொனி சில்வா ஆகியோர் இணைந்து மேற்படி சட்ட விரோத மான முறையில் வெட்டப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி மாட்டு இறைச்சியை மீட்டுள்ளனர்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் அனுமதி இன்றியும், மாடு வெட்ட வேண்டிய உரிய இடத்தில் வெட்டாமலும், வீடு ஒன்றில் வைத்து சட்ட விரோதமான முறையில் வெட்டி விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த நிலையி லேயே குறித்த மாட்டு இறைச்சியைப் பொது சுகாதார பரிசோதகர்கள் மீட்டுள்ளனர்.

மேலும் சட்ட விரோதமாக வெட்டப்பட்ட மாட்டு இறைச்சியை விற்பனை செய்ய முயன்ற ஒருவர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது, குறித்த நபரை ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல நீதிமன்றம் உத்தரவிட்டது.

மீட்கப்பட்ட மாட்டு இறைச்சியை நீதிமன்றத் தின் உத்தரவுக்கு அமைவாக அழிக்க நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டன என அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் ஏழாம் திகதி பதவியேற்கிறார்!



தமிழக சட்டசபைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி வெற்றிபெற்றுள்ள நிலையில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் எதிர்வரும் ஏழாம் திகதி முதல்வராகப் பதவியேற்பார் என தமிழகச் செய்திகள் தெரிவித்துள்ளன.

சென்னையில் நாளை நடைபெறவுள்ள தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் மு.க.ஸ்டாலின் உத்தியோகபூர்வமாக தி.மு.கவின் சட்ட மன்றத் தலைவராகத் தெரிவு செய்யப்படுவார். சென்னை கிண்டியிலுள்ள ஆளுநர் மாளிகையில் வரும் ஏழாம் திகதி முதலமைச்சருக்கான பதவி ஏற்பு விழா நடைபெறும் எனவும் செய்திகள் உறுதிப்படுத்தியுள்ளன.

கொளத்தூர் தொகுதியின் தனது வெற்றிச் சான்றிதழை முன்னாள் முதலமைச்சரும் தந்தையாருமான கலைஞர் மு.கருணாநிதியின் நினைவிடத்தில் வைத்து தி.மு.க. தலைவர் ஸ்டாலின் மரியாதை செலுத்தினார். அதன் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என ஏற்று நடப்போம். தமிழக மக்கள் வழங்கியுள்ள மகத்தான வெற்றிக்கு வழிவகுத்துத் தந்துள்ளவர்களுக்கு எங்களது நன்றி. எந்த எதிர்பார்ப்போடு வெற்றியைத் தந்தார்களோ அந்த நம்பிக்கைக்கு ஏற்ப தி.மு.க. ஆட்சியை நடைபெறச் செய்வோம்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கருணாநிதி ஆகியோரின் வழிநின்று சிறப்பான ஆட்சியைத் தருவோம். தமிழகம் பாதாளத்திற்குச் சென்றுள்ளதைப் புரிந்து தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு அளித்துள்ளீர்கள். தி.மு.கவுக்கு வாக்களிக்கத் தவறியவர்களுக்கும் சேர்த்தே பணியாற்றுவோம். தேர்தல் அறிக்கையில் அளித்த, மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளையும் ஆட்சிப் பொறுப்பேற்ற பின் படிப்படியாக நிறைவேற்றுவோம்

பதவியேற்பு விழா, ஆடம்பர விழாவாக இல்லாமல் மிகவும் எளிமையாகவே இருக்கும். கொரோனாப் பரவலைக் கருத்தில் கொண்டு ஆளுநர் மாளிகையிலேயே எனது பதவியேற்பு விழா நடைபெறும். மூத்த தலைவர்களின் அறிவுரையைக் கேட்டு நான் செயல்படுவேன் என்று குறித்த சந்திப்பில் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

## மேற்கு வங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் வெற்றி

### முதல்வர் மம்தா பானர்ஜி உற்சாகம்

மேற்கு வங்கத்தில் எட்டுக் கட்டங்களாக நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை முடிவில், திரிணாமுல் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று ஆட்சியைத் தக்கவைத்துள்ளது.

நந்திகிராம் தொகுதியில் பா.ஜ.க. சார்பில் போட்டியிட்ட சுவேந்து அதிகாரி வெற்றிபெற்றுள்ளார் எனத் தேர்தல் ஆணையம் சார்பில் இறுதி முடிவாக அறிவிக்கப்பட்டுள்ளன. ஆனால், அதற்கு முன் மம்தா பானர்ஜி வெற்றி என அறிவிக்கப்பட்டிருந்தமை குழப்பங்களை ஏற்படுத்தியிருந்தது. தான் போட்டியிட்ட தொகுதியில் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் மம்தா தோல்வியடைந்திருந்தாலும் கட்சி பெற்ற வெற்றியின் மகிழ்ச்சியை அவர் உற்சாகமாக மக்களோடு பகிந்துகொண்டார்.

தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து முதலமைச்சர் மம்தா பானர்ஜி ஊடகங்களினூடாக மக்களோடு உரையாடினார்.



‘ஒவ்வொருவருக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். கொரோனா விதிமுறைகளைக் கடைப்பிடியுங்கள். வெற்றிப் பேரணிகளை நடத்த வேண்டாம் எனவும் ஒவ்வொருரையும் உங்களுடைய வீடுகளுக்குச் செல்லும்படியும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். நமது முன்னுரிமை கொரோனா பாதிப்புகளைக் கட்டுப்படுத்துவதற்குத்தான். இது வங்காளத்திற்கான வெற்றி. வங்காளத்திலேயே இது சாத்தியப்படும்’ என்று அவர் தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதத்தில் ஏற்பட்ட காயம் காரணமாக சக்கர நாற்காலியில் அமர்ந்தவாறே பிரசாரம் உள்ளிட்ட தேர்தல் பணிகளை மேற்கொண்ட மம்தா பானர்ஜி, தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து அதிலிருந்து எழுந்து சில அடி தூரம் நடந்து சென்று தொண்டர்களை ஆச்சரியப்படுத்தினார்.

தான் போட்டியிட்ட தொகுதியில் அவர் தோற்றிருந்தாலும் முதல்வராகப் பதவியேற்று ஆறு மாதங்களுக்குள் ஏதாவதொரு தொகுதியில் இடைத் தேர்தலை நடத்தி வெற்றி பெற்று முதல்வர் பதவியை அவர் தக்கவைத்துக்கொள்ள இயலும். 2011 இல் அவர் முதல் முறை முதலமைச்சராகப் பதவியேற்றபோது மேற்கு வங்க சட்டசபைத் தேர்தலில் அவர் போட்டியிட்டிருக்கவில்லை. நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அவர், பின்னர் பாபனிபூரில் போட்டியிட்டு வெற்றிபெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அசாம் சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி

### சோனாவால் மீண்டும் முதலமைச்சராகிறார்



126 இடங்களைக் கொண்டுள்ள அசாம் சட்டசபைக்கு கடந்த மார்ச் மாதம் 27 ஆம் திகதி தொடங்கி ஏப்ரல் 6 வரை 3 கட்டங்களாகத் தேர்தல் நடத்தப்பட்டது. இந்த தேர்தலில் ஆட்சியைத் தக்கவைப்பதற்காக பா.ஜ.க. கூட்டணியும், ஆட்சியைப் பிடிக்க காங்கிரஸ் கூட்டணியும் கடும் போட்டியில் இறங்கின. அசாம் ஜாதிய பரித்தும், ரைஜோர் தளமும் கூட்டணி அமைத்து போட்டியிட்டன. 946 வேட்பாளர்கள் களத்திலிருந்த நிலையில் 81.07 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்தன.

தேர்தலுக்குப் பிந்தைய பெரும்பான்மையான கருத்துக்கணிப்புகள் இந்த மாநிலத்தில் பா.ஜ.க. கூட்டணிதான் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிக்கும் என தெரிவித்தன. இதன்படியே வாக்கு எண்ணிக்கை ஆரம்பித்ததில் இருந்து பா.ஜ.க. கூட்டணியின் வேட்பாளர்கள்தான் பெரும்பான்மையான தொகுதிகளில் முன்னிலை பெற்று வந்தனர்.

மொத்தம் உள்ள 126 இடங்களில் 64 இடங்களில் வெற்றி பெற்றாலே பெரும்பான்மைப் பலம் பெற்று விடலாம் என்ற நிலையில் 75 இடங்களில் வென்று பா.ஜ.க. கூட்டணி ஆட்சியைத் தக்க வைத்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதன்மூலம் தொடர்ந்து இரண்டாவது முறையாக சர்வானந்தா சோனாவால் முதலமைச்சராகப் பதவி ஏற்கவுள்ளார். இங்கு காங்கிரஸ் கூட்டணிக்கு 50 இடங்களும் சுயேட்சை வேட்பாளர்களுக்கு ஒரு இடமும் கிடைத்துள்ளன.

இந்த மாநிலத்தில் காங்கிரஸ் அல்லாத ஒரு கட்சி தொடர்ந்து இரு முறை வெற்றி பெற்று ஆட்சி அமைப்பது இதுவே முதல்முறை. அந்த வகையில் இது பா.ஜ.கவுக்கு சாதனை வெற்றியாக அமைந்துள்ளது. முதலமைச்சர் சர்வானந்தா சோனாவால், மஜூலி தொகுதியில் இருந்து வெற்றி பெற்றிருக்கிறார்.

## மக்களின் முடிவு பணிவோடு ஏற்கப்பட்டது

### குஷ்பு டுவிட்டர் பதிவு

தேர்தல்கள் வரும் போகும், நல்ல பணிகள் கண்டிப்பாகத் தொடரப்பட வேண்டும் என மு.க. குஷ்பு தேர்தலில் வெற்றி பெற்ற தி.மு.க.வுக்கும் அதன் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கும் வாழ்த்துத் தெரிவித்துள்ளமையோடு, நல்ல பணிகளைத் தொடர வேண்டும் என்று டுவீட் செய்துள்ளார்.

நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் அமோக வெற்றி பெற்றுள்ளது. தி.மு.கவின் வேட்பாளர் டாக்டர் எழிலனை எதிர்த்து ஆயிரம் விளக்கு தொகுதியில் அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜனதா சார்பில் போட்டியிட்ட நடிகை குஷ்பு தோல்வியடைந்தார்.

இதன் பின் தனது டுவிட்டர் பக்கத்தில் அவர், ஒவ்வொரு வெற்றியும் தோல்வியோடுதான் ஆரம்பமாகிறது. மக்களின் தீர்ப்பை அடக்கத்துடன் ஏற்றுக் கொள்கிறேன். ஆயிரம் விளக்கு தொகுதியில் வெற்றி பெற்ற டாக்டர் எழிலன் அவர்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துகள். எது எப்படியோ, நான் தொடர்ந்து மக்களுக்காக உழைப்பேன். அவர்களுடன் நிற்பேன். என் மீது நம்பிக்கை வைத்த



அனைவருக்கும் நன்றி. வெற்றியாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துகள். கடைசியில் மக்கள்தான் முடிவு செய்கிறார்கள். அவர்களின் முடிவு பணிவோடு ஏற்கப்பட்டது என்று டுவீட் செய்திருந்தார்.

இதன் பின்னர் தி.மு.கவின் டுவிட்டர் பக்கத்தையும், மு.க.ஸ்டாலினின் டுவிட்டர் பக்கத்தையும் குறிப்பிட்டு பதிவிட்டுள்ள குஷ்பு நாம் ஒற்றுமையோடு நிற்போம். அழகிய மாநிலமான தமிழ்நாட்டை இன்னும் சிறப்பானதாக்க வரப்போகும் புதிய அரசுக்கு உதவுவோம். தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநிலத்தை தனது வழிகாட்டுதல் மற்றும் தலைமையின் கீழ் முன்னெடுத்துச் செல்வார் என்று நான் நம்புகிறேன். தேர்தல்கள் வரும் போகும், நல்ல பணிகள் கண்டிப்பாகத் தொடரப்பட வேண்டும் எனக் கூறியுள்ளார்.

## மக்களுக்காக உழைக்க வந்ததே கமலின் வெற்றி

### நடிகர் பார்த்திபன் டுவிட்டரில் பாராட்டு!

கோவை தெற்கு தொகுதியில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் வேட்பாளர் கமல்ஹாசனுக்கும் பா.ஜ.க. வேட்பாளர் வானதி சீனிவாசனுக்கும் இடையே பலத்த போட்டி நிலவியது. இறுதியில் 1,728 வாக்குகள் வித்தியாசத்தில் வானதி சீனிவாசன் வெற்றிபெற்றார் என அறிவிக்கப்பட்டது.

கமல்ஹாசனுக்கு 51,481 வாக்குகளும் வானதிக்கு 53,209 வாக்குகளும் கிடைத்துள்ளன. தி.மு.க. கூட்டணியில் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சியின் மயுரா ஜெயக்குமார் 41,426 வாக்குகளைப் பெற்றார்.

இந்த நிலையில், நடிகர் பார்த்திபன் தனது டுவிட்டர் பக்கத்தில் கமல் அவர்களின் வெற்றி என்பது, வெற்றி தோல்வி – எண்ணிக்கையில் இல்லாமல், தன்னம்பிக்கையில் மக்களுக்காக உழைக்க முன்வந்து, அரசியல் களம் அறிந்தப்



பின்(னும்) வாங்காமல், வெல்வ தற்கு கூட்டு பொரியல் ஏதும் வைக்காமல் பேராண்மையுடன் நின்றதே என்று பாராட்டிப் பதிவிட்டுள்ளார். முதல் தடவை போட்டியிட்டு கடும் போட்டியை வழங்கிய கமல்ஹாசனுக்கு பலரும் தங்களது பாராட்டுக்களை சமூக வலைத் தளங்களின் ஊடாகத் தெரிவித்து வருகின்றனர்.

## கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்த ஒடிசாவில் 5 ஆம் திகதி முதல் ஊரடங்கு

ஒடிசா மாநிலத்தில் கொரோனா நோய்த் தொற்றினால் புதிதாக பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. நேற்றுக் காலை வரையிலான 24 மணி நேரத்தில் புதிதாக 8,015 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் மாநிலம் முழுவதும் நாளை மறுநாள் 5ஆம் திகதி முதல் 14 நாள்கள் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்படுகின்றது.

நாளை மறுநாள் காலை 5 மணி முதல் 19 ஆம் திகதி காலை 5 மணி வரை ஊரடங்கு அமுலில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஊரடங்கின்போது பொதுமக்கள் காலை 7 மணி முதல் 12 மணி வரை தமது இருப்பிடங்களிலிருந்து சுமார் 500 மீற்றர் தூரம் வரை நடந்து சென்று காய்கறி மற்றும் அத்தியாவசியப் பொருள்களை வாங்கி வருவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர மால்கள், சினிமா தியேட்டர்கள், கல்வி நிறுவனங்கள், சலூன்கள் போன்ற அனைத்தும் மூடப்பட்டு இருக்கும் என்றும் வார இறுதி நாள்களில் முழு அடைப்பு பின்பற்றப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்கையை மாற்றிக் கொள்ளாவிட்டால் மிக மோசமான விளைவுகளை சந்திப்பீர்

## அமெரிக்காவுக்கு வடகொரியா எச்சரிக்கை

அமெரிக்கா தனது விரோத கொள்கையை மாற்றிக் கொள்ளாவிட்டால் எதிர்காலத்தில் அந்த நாடு மிக மோசமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என வடகொரியா பகிரங்க எச்சரிக்கை விடுத் துள்ளது.

ஐ.நா. சபையின் தீர்மானங்களை மீறியும் சர்வதேச நாடுகளின் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் வடகொரியா கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை சோதித்து வந்தது.

மேலும் அவ்வப்போது அணு ஆயுதங்களையும் சோதித்து வந்தது. இந்த விவகாரத்தில் வடகொரியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே நேரடி மோதல் உருவானது.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகான அமெரிக்காவின் அப்போதைய ஜனாதிபதி ட்ரம் பும், வடகொரியா தலைவர் கிம் ஜாங் அன்னும் 3 முறை நேரில் சந்தித்து பேச்சு நடத்தினர்.

எனினும் இந்தப் பேச்சு களில் இரு தரப்புக்கும் இடையில் எந்தவித உடன்பாடும் எட்டப்படவில்லை.

இதனிடையே அமெரிக்கா வில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய ஜனாதிபதியாக



ஜோ பைடன் பதவி ஏற்றதை தொடர்ந்து, வடகொரியாவுடனான பிரச் சினைக்கு தீர்வுகாணப்படும்எனஎதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் வடகொரியாவுடனான பதற்றத்தை தணிப்பதற்கு பல்வேறு வழிமுறைகளில் அந்த நாட்டு அரசை தொடர்பு கொள்ள முயற்சித்ததாகவும் ஆனால் வட கொரியா அவற்றுக்கு பதில் அளிக்கவில்லை என்றும் ஜோ பைடன் நிர்வாகம் குற்றம் சாட்டியது. இதனால் அமெரிக்கா மற்றும் வடகொரியா இடையிலான உறவில் தொடர்ந்து பதற்றம் நீடிக்கிறது.

**ஜோ பைடன்**

இந்த நிலையில் கடந்த வாரம் அமெரிக்க நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் முதல் முறையாக உரையாற்றிய ஜனாதிபதி ஜோ பைடன், வடகொரியா மற்றும் ஈரானின் அணுசக்தி திட்டங்கள் அமெரிக்காவின் பாதுகாப்பு மற்றும் உலகப் பாதுகாப்புக்கு கடுமையான அச்சுறுத்தலாக இருப்பதாக கூறினார்.

மேலும் தூதரக ரீதியிலும் கடுமையான சட்டங்கள் மூலமாகவும் இந்த பிரச்சினைகளை தீர்க்க நட்பு நாடு களுடன் இணைந்து பணியாற்றுவேன் என்றும் அவர் உறுதியளித்தார்.

இதற்கிடையில் வடகொரியாவுடனான பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் முந்தைய நிர்வாகங்களின் தோல்வியடைந்த அணுகு முறையில் இருந்து முற்றிலுமாக விலகி, மாறுபட்ட அணுகுமுறையை கையிலெடுக்க ஜோ பைடன் திட்டமிட்டுள்ளனர் என வெள்ளை மாளிகை நேற்று முன்தினம் தெரிவித்தது.

இந்த நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள வடகொரியா, அமெரிக்கா தனது விரோத கொள்கையை மாற்றிக் கொள்ளாவிட்டால் எதிர்காலத்தில் அந்த நாடு மிக மோசமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து வடகொரியா வெளியுறவு அமைச்சகத்தின் மூத்த அதிகாரி குவான் ஜாங் கன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

வடகொரியாவின் அணு சக்தி திட்டம் பற்றி அமெரிக்க நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ஜோ பைடன் ஆற்றிய உரை முற்றிலும் சகிக்க முடியாதது மற்றும் மிகப்பெரிய தவறு ஆகும்.

அரை நூற்றாண்டுக்கும் மேலாக அமெரிக்கா செய்ததைப் போலவே வடகொரியாமீதானவிரோதகொள்கையைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்கான ஜோ பைடனின் நோக்கத்தை அவரது உரை தெளிவாக பிரதிபலிக்கிறது.

அமெரிக்க தலைமை நிர்வாகி இன்றைய பார்வை யின் வெளிச்சத்தில் ஒரு மிகப்பெரிய தவறை செய்தார் என்பது உறுதி. இதன் மூலம் வடகொரியா மீதான அமெரிக்காவின் புதிய கொள்கையின் முக்கிய நோக்கம் தெளிவாகி விட்டதால் அதற்கான நட வடிக்கைகளுக்கு நாங்கள் அழுத்தம் கொடுக்க நிர்ப்பந்திக்கப்படுவோம். இதன் மூலம் எதிர்காலத்தில் அமெரிக்கா கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட மிகவும் மோசமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# இராணுவ ஆட்சிக்கு எதிரான போராட்டம் மியன்மாரில் மேலும் 7 பேர் சுட்டுக்கொலை



தென்கிழக்கு நாடான மியன்மாரில் கடந்த பிப்ரவரி மாதம் 1 ஆம் திகதி இராணுவம் திடீரென்று புரட்சியில் ஈடுபட்டு ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது. அந்நாட்டின் தலைவர் ஆங் சான் சுகி உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவ ஆட்சிக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். சாலையில் இறங்கி அவர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

போராட்டக்காரர்களை ஒடுக்க இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் இதுவரைக்கும் 600 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இரு நாள்களாக இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தாமல் இருந்த நிலையில் நேற்று நடந்த போராட்டத்தில் மீண்டும் துப்பாக்கிச் சூட்டை நடத்தி இருக்கிறார்கள். நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் இராணுவ ஆட்சிக்கு எதிராக நேற்று யிற்றுக்கிழமை பெரிய அளவில் போராட்டங்கள் நடந்தன.

யான்கூன், மண்டேலே உள்ளிட்ட நகரங்களில் ராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 7 போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையே இராணுவ ஆட்சிக்கு எதிராக போராட்டம் நடத்தி வரும் அமைப்புகள் சர்வதேச கவனத்தை ஈர்க்க மியன்மார் மக்களின் ஒற்றுமை குரல் உலகை உலுக்கும் என்ற முழக்கத்தை ஏற்படுத்தி உள்ளனர்.

## இரு படகுகள் மோதி விபத்து 25 பேர் உயிரிழந்த சோகம்

பங்காளதேஷ் ஷிப்சார் நகர் அருகே உள்ள பத்மா நதியில் இன்று காலை பயணிகளை ஏற்றிச் சென்ற படகும், மணல் ஏற்றி வந்த மற்றொரு படகும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. இதனால் படகில் இருந்த பயணிகள் ஆற்றில் விழுந்து தத்தளித்தனர். இதுபற்றி தகவல் அறிந்த மீட்புக் குழுவினர், சம்பவ இடத்திற்கு வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். 25 பேரின் உடல்கள் ஆற்றில் இருந்து மீட்கப்பட் டன. 5 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். மேலும் சிலரைக் காணவில்லை. அவர்களைத் தேடும் பணியில் தீயணைப்புப் படையினர் மற்றும் உள்ளூர் மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

தரம் குறைந்த படகுகள், மோசமான பராமரிப்பு, அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றிச் செல்வது உள்ளிட்ட காரணங்களால் பங்காளதேசில் இது போன்ற படகு விபத்துகள் அதிகம் ஏற்படுகின்றன என வல்லுநர்கள் கூறுகின்றனர்.

## விண்வெளி மையத்திலிருந்து இரவு திரும்பிய நாசா வீரர்கள்



சர்வதேச விண்வெளி மையத்திற்கு சென்ற நாசா விண்வெளி வீரர்கள் 53 ஆண்டுகளில் முதன் முறையாக இரவு நேரத்தில் பூமிக்கு திரும்பி சாதனை படைத்துள்ளனர்.

அமெரிக்கா மற்றும் ஜப்பானை சேர்ந்த விண்வெளி வீரர்கள் கடந்த நவம்பர் மாதம் ஆராய்ச்சிக்காக சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டனர். 167 நாள்களுக்கு பின் விண்வெளியிலிருந்து ஸ்பேஸ் - எக்ஸ் நிறுவனத்தின் க்ரூ (Crew) டிராகன் என்ற விண்வெளி ஓடத்தில் புறப்பட்ட நான்கு பேரும் புளோரிடா மாகாணத்திலுள்ள பனாமா நகரில் நள்ளிரவில் வெற்றிகரமாக தரையிறங்கினர்.

# ஈரானுடன் கைதிகள் பரிமாற்ற உடன்படிக்கை; வெளியான செய்திக்கு: அமெரிக்கா மறுப்பு

அமெரிக்கா-ஈரான் இடையே அணு ஆயுத விவகாரத்தில் பிரச்சினை இருந்து வருகிறது. மேலும் இரு நாடுகளிடையே பல்வேறு விடயங்களில் மோதல் போக்கு இருக்கிறது.

ஈரான் நாட்டில் உளவு பார்த்ததாக கூறி 4 அமெரிக்கர்களை அந்நாட்டு அரசு கைது செய்துள்ளது. அதேபோல் ஈரான் நாட்டைச் சேர்ந்தவர்களும் அமெரிக்காவில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஈரானில் கைது செய்யப்பட்டுள்ள அமெரிக்கர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கையில் அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது. இது தொடர்பான பேச்சும் நடந்து வருகிறது.

இந்த நிலையில் ஈரான், அமெரிக்கா இடையே கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம் ஏற்பட்டதாகவும், 4 அமெரிக்கர்களையும் விடுவிப்பதற்காக ஈரான் கைதிகளை விடுவிக்கவும் 700 கோடி அமெரிக்க டொலர்களை ஈரானுக்கு தரவும் அமெரிக்கா ஒப்புக் கொண்டதாக ஈரான் தொலைக்காட்சி ஒன்றில் செய்தி வெளியானது.

இந்த நிலையில் ஈரானுடன் கைதிகள் பரிமாற்றம் நடந்ததாக வெளியான தகவலை அமெரிக்கா திட்டவட்டமாக மறுத்துள்ளது. இது குறித்து வெள்ளை மாளிகையின் தலைமை அதிகாரி ராப் க்ளெய்ன் கூறியதாவது:-

துரதிஷ்டவசமாக ஈரான் தரப்பில் வெளியிடப்பட்ட அந்த அறிக்கை பொய்யானது. 4 அமெரிக்கர்களையும் விடுவிக்க எந்த உடன்பாடும் ஏற்படவில்லை. அவர்களை விடுவிக்க நாங்கள் மிகவும் கடுமையாக உழைக்கிறோம்.

அவர்களை வீட்டிற்கு அழைத்து வருவதற்கு இதுவரை எந்த உடன்பாடும் ஏற்படவில்லை என்றார்.

அணு ஆயுத ஒப்பந்த விவகாரத்தில் ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது. அதனை நீக்க வேண்டும் என்று ஈரான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

ஆனால் அணு ஆயுத ஒப்பந்தத்தில் ஈரான் இணைந்தால் தான் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று அமெரிக்கா தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இணைய வழி வகுப்புக்கள்
(Online Classes)
தரம் 10, 11 (O/L) மாணவர்களுக்கான
வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்
ஆங்கில, தமிழ் மொழி மூலமான வகுப்புக்கள்.
Zoom செயலி ஊடாக
இணைந்து கொள்ள அழையுங்கள்!
077 304 1905

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழ் – முஸ்லிம் உறவை சங்கடப்படுத்தி சகோதரத்துவத்தை சீரழிக்கும் சாணக்கியன்

## கல்முனை மாநகர பிரதி முதல்வர் கருத்து

**(நூருல் ஹுதா உமர்)**

நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தமிழ் முஸ்லிம் உறவை சங்கடப்படுத்தி சகோதரத்துவத்தைச்சீரழிப்பதுபோன்று பொய்யான நடைமுறை சாத்தியமற்ற வாக்குறுதிகளை தமிழ் மக்களுக்கு வழங்கி வருகிறார். இப்படியான ஒரு அநியாயமிக்க காரணியாக நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் இருக்கக் கூடாது.

இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்காக எல்லை நிர்ணய ஆணைக்குழு அமைக்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுவருகின்றன. எல்லா சமூகத்தினதும் வாக்கு மூலங்கள் பெறப்பட்டுயாருக்கும்அநீதி இடம் பெறாத வகையில் கல்முனைஉபபிரதேசசெயலக விவகாரம் தீர்க்கப்படும் என கல்முனை மாநகர பிரதிமுதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமின் பிரத்தியேக இணைப்பு செயலாளருமான ரஹ்மத் மன்சூர் தெரிவித்தார்.

அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் வெளியிட்ட கருத்துக்களுக்குப் பதிலளிக்கும் முகமாக கல்முனை கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வெளிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரச்சினையின் அளவு தெரியாமல்பேசிக்கொண்டிருக்கிறார்கள். எமது பிரச்சினையை இங்கு இருக்கும் தமிழ் மக்கள் பிரதிநிதிகளும் முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளும் அமர்ந்து பேசி தீர்வை ப்பெற லாம் என்பதை உறுதியாக நம்புகிறேன். தமிழருக்கும் முஸ்லிம்களுக்குமான உறவு காலா காலமாக நீடித்து வருவது. தலைவர் அஸ்ரபுக்கும் தமிழ் கூட்டமைப்புக்கும் நெருங்கிய உறவு இருந்தது. எமது பிரச்சினைகளைத் தீர்க்க இனரீதியாக, அரசியல் ரீதியாக சிந்திக்காமல் நியாய பூர்வமாகசிந்திக்க வேண்டும். கல்முனை மாநகர சபைஉறுப்பினர்ஹென்றி மஹேந்திரன் மக்கள் அங்கீகாரம்பெற்ற ஒருவர். அவர் கல்முனை விடயத்தில் மு.கா. பிரதித் தலைவர் ஹரீஸ் எம்.பியைத் தொடர்பு படுத்தி பேசுவதை விடுத்து நியாயத்தைச் சிந்திக்க வேண்டும். எல்லை நிர்ணயம் செய்யப்பட்டு நிர்வாகத்தை சரியாக வகைப் படுத்தி தமிழ் மக்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதில் எங்களுக்கு எவ்வித பிரச்சினைகளுமில்லை.

தமிழ்பேசும்மக்களாக ஒன்றாகப் பயணித்து நாம் பிட்டும் தேங்காய்ப் பூவும் போன்று வாழ்ந்தவர்கள் என்பதை நிரூபிக்கவேண்டும். இன்று நடைபெறப் போகும் கூட்டத்தில் மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம், மு.கா பிரதித்தலைவர் ஹரீஸ் ஆகியோர் கலந்து கொண்டு இது தொடர்பில் பேசுவார்கள். யாருக்கும் அநியாயம் நடக்கக் கூடாது என்பதில்நாங்கள்தெளிவாக உள்ளோம். இந்த விடயத்தில் வெளி சக்திகளே கல்முனைதமிழ்மக்களை குழப்பிக்கொண்டிருக்கிறன என்றார்.



# கூரையைப் பெயர்த்து யானைகள் அட்டகாசம்

உணவுக்காக அதிகாலையில் கூரையை பெயர்த்து யானைகள் அட்டகாசம் செய்துள்ள இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணியளவில் பொத்துவிலையடுத்துள்ள கோமாரிப்பிரிவிலுள்ள செல்வபுரம் கிராமத்தில் இடம் பெற்றுள்ளது.

அதேவேளை கோமாரி பிரதேசத்தில் மரவள்ளித் தோட்டத்தையும் சேதப்படுத்தியுள்ளது. இவ்வாறு தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் யானைத்தாக்கத்தால் கோமாரிக்கிராமம் அச்சத்தில் மூழ்கியுள்ளது.

அங்கு புகுந்த காட்டு யானைகள் சின்னதம்பி செல்வராசா என்ற குடும்பஸ்தரைத் தாக்கிவிட்டு அவரது வீட்டின் கூரையை உடைத்து உள்ளிருந்த நெல், அரிசி, பச்சை இலைக்கறிகளை உண்டது. வீட்டையும் துவம்சம் செய்தது. நித்திரையிலிருந்த செல்வராசா ஓடி மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

இதுதொடர்பாகத.தே.கூட்டமைப்பின்பொத்துவில் பிரதேசசபை உறுப்பினர் த.சுபோதரன் நேரில் சென்று பார்வையிட்டு சேதவிவரத்தை கிராம சேவை உத்தியோகத்தரிடம் அறிவித்துள்ளார். கூடவே கிராம அபிவிருத்திச்சங்க தலைவர் ஜோய் நோக்கிரட்டும் சென்றுள்ளார்.

உறுப்பினர் த.சுபோதரன் இந்தள விடயத்தை லாகுகலையிலுள்ள வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இதற்கு முன்னரும் இவ்வாறு பலதடவைகள் அவர்களிடம் தெரிவித்தபோதிலும் அவர்கள் வந்து பார்ப்பதில்லை என பொதுமக்களும் உறுப்பினரும் குற்றம் சாட்டுகின்றனர்.

# வீதியை விட்டுவிலகி விபத்துக்குள்ளானது பஸ்



**(அப்துல்சலாம் யாசீம்)**

திருகோணமலை -ஹொரவ் பொத்தான பிரதான வீதியின் மதவாச்சிப் பகுதியில் பஸ் ஒன்று வீதியை விட்டு விபத்துக்குள்ளானதில் இருவருக்கு காயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இவ்விபத்து இன்று அதிகாலை 4 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்பு நோக்கிப் பல்கலைக் கழக மாணவர்களை ஏற்று வதற்காக ச் சென்று கொண்டிருந்த தனியாருக்குச் சொந்தமான பஸ்ஸொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாகத் தெரிய வருகின்றது.

குறித்த விபத்தில் இருவருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தூக்க கலக்கத்தினாலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. இவ்விபத்து தொடர்பில் விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழர் உணர்வாழ்வு அமைப்பின் தலைவர் மோகன் நேற்று கைது

தமிழீழ விடுதலைப் புலிகளை மீண்டும்முகநூல்வாயிலாகபுதுப்பித்த குற்றச்சாட்டில் தமிழர் உணர்வாழ்வு அமைப்பின்தலைவர்மோகன் நேற்று இரவு மட்டக்களப்பு செங்கலடி யில் உள்ள அவரது வீட்டில் வைத்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்



கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் முகநூல் வழியாக விடுதலைப்புலிகளை மீண்டும் புதுப்பிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்துள்ளார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 3 மாதகால பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்ற அனுமதியினைப் பெற்று அவரை நேற்றிரவு அவரது வீட்டில் வைத்து கைதுசெய்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேஸ்புக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான பதிவுகள் டக் (tag ) செய்யப்பட்டமை , அனுப்பப் பட்டமை தொடர்பிலும்,தடை செய்யப்பட்ட அமைப்புக்களின் படங்கள், காணொலிகள் வெளிநாடுகளிலிருந்து இவரது முகநூலுக்கு அனுப்பப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது இவர் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் புதன்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் . இதேவேளைகைதானநபரிடம்விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# ஆரையம்பதி பொதுச் சந்தை மூடப்பட்டது

மண்முனைப் பிரதேச சபை பிரிவிலுள்ள ஆரையம்பதிப் பொதுச் சந்தை 1 ஆம் திகதியில் இருந்து தற்காலி கமாக மூடப்பட்டுள்ளது என் ஆரையம்பதி சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.



ஆரையம்பதி பொதுச் சந்தையிலுள்ளவியாபாரிகள் சிலருக்கு மேற் கொள்ளப் பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் போது வியாபாரியொருவருக்கு கொவிட் 19தொற்றுகண்டறியப்பட்டது.

இதனையடுத்து, ஆரையம்பதி பொதுச்சந்தையை தற்காலிகமாக மூடிய சுகாதார அதிகாரிகள், வியாபாரிகளுக்கு விழிப்பூட்டல் நடவடிக்கையையும் மேற்கொண்டனர்.

அத்துடன், கிருமித் தொற்று நீக்கம் செய்யும் நடவடிக்கையும் முன்னெடுத்தனர்.

மண்முனைப் பிரதேச சபைத் தவிசாளர் டி.தயானந்தன், ஆரையம்பதி மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். புலேந்திரகுமார், பொதுச் சுகாதார பரிசோதகர் கே.ஜே.சங்கர் உட்பட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார் உட்பட அதிகாரிகள் இதன் போது சமூகமளித்திருந்தனர்.சந்தையை முழுமையாக கிருமித் தொற்று நீக்கம்செய்த பின்னர் மீளவும் சந்தையைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுமென மண்முனைப் பிரதேச சபை தவிசாளர் தெரிவித்தார்.

# கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஸ்ரீ.மு.காங்கிரஸும் கூட்டமைப்பும் பேசவில்லை

## தமிழீழ விடுதலை இயக்கம் தெரிவிப்பு

கிழக்கு மாகாண சபைத்தேர்தல்தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே உத்தியோகபூர்வமான பேச்சுகள் எதுவும் இடம்பெறவில்லை என தமிழீழ விடுதலை இயக்கம் தெரிவித்துள்ளது.

தமிழ் முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணைந்து கிழக்கு மாகாண சபையின் ஆட்சியை கைப்பற்றுவது தொடர்பில் பேச்சு நடத்தப்பட்ட தனை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதிசட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் நேற்று முன்தினம் அறிவித்தார்.

கிழக்கு மாகாண சபைத்தேர்தல் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் நடைபெற்ற ஆரம்பக் கட்ட பேச்சினை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சாதகமாக பரிசீலிப்பதாக கட்சியின்செயலாளர்நிசாம் காரியப்பர் கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சந்தாங்கேணி மைதானம் இன்று புனர் நிர்மாணம்

கல்முனை,மே 03

17 கோடி ரூபா ஒதுக்கீட்டில் கல்முனை மாநகர சந்தாங்கேணி விளையாட்டு மைதான பாரிய அளவிலான உள்ளக விளையாட்டு தொகுதி அமைப்பதற்கான வேலைகள் இன்று ஆரம்பமாகின.

இது தொடர்பில் அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எம்.எம். ஹரீஸ் விளையாட்டு அமைச்சின் பொறியியல் பிரிவின் பணிப்பாளரைச் சந்தித்துக் கலந்துரையாடி இந்த வேலைத்திட்டத்தின் இறுதிக்கட்டத் தீர்மானத்தை எடுத்தனர்

இவ்வேலைத்திட்டத்தை முன்னெடுக்க கட்டட நிர்மாண வேலைகளை செய்யும் ஒப்பந்த நிறுவனத்திற்கு அதற்கான பணிப்புக்களையும், ஆவணங்களையும் விளையாட்டு அமைச்சு வழங்கியிருந்த நிலையில் இதன் அடுத்த கட்டமாக கட்டுமான வேலைகள் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# மட்ரிட் ஓபின் டென்னிஸ் தொடர் ஓசாகாவை வீழ்த்தி அதிர்ச்சி அளித்தார் முச்சோவா



மட்ரிட் ஓபின் சர்வதேச டென்னிஸ் போட்டித்தொடர் ஸ்பெயினில் நடந்து வருகிறது.

களிமண் தரைப் போட்டியான இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த இரண்டாவது சுற்று ஆட்டம் ஒன்றில் சர்வதேச ரீதியில் இரண்டாம் நிலை வீராங்கனையும், அவுஸ்திரேலிய ஓபின் சம்பியனுமான ஜப்பானின் நவோமி ஓசாகா, தரவரிசையில் 20 ஆவது இடம் வகிக்கும் செக் குடியரசின் கரோலினா முச்சோவாவை எதிர்கொண்டார்.

விறுவிறுப்பான இந்த மோதலில் முச்சோவா 6 - 4, 3 - 6, 6 - 1 என்ற செட் கணக்கில் ஓசாகாவுக்கு அதிர்ச்சி அளித்தார். இந்த ஆட்டம் 1 மணித்தியாலம் 49 நிமிடங்கள் வரை நீடித்தது.

இந்த சீசனில் முதல் 5 இடங்களுக்குள் இருக்கும் வீராங்கனையொருவரை முச்சோவா வீழ்த்துவது இது மூன்றாவது தடவையாகும். பெப்ரவரியில் நடைபெற்ற அவுஸ்திரேலிய ஓபின் தொடரின் அரையிறுதிவரை இவர் முன்னேறியிருந்ததும் கவனிக்கத்தக்கது. எனவே, இவர்மீது இப்போது எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

அடுத்த சுற்றில் கிரேக்கத்தவரான மரியா சக்காரியை முச்சோவா எதிர்கொள்ளவுள்ளார்.

# பஞ்சாப் கப்டன் லோகேஷ் ராகுலுக்கு சத்திரசிகிச்சை



ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் பஞ்சாப் கிங்ஸ் அணியின் கப்டனான லோகேஷ் ராகுல் இரு தினங்களுக்கு முன்னர் கடுமையான வயிற்றுவலியால் அவதிப்பட்டார். இதையடுத்து மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு அவருக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் அவர் குடல்வால் அழற்சியால் பாதிக்கப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

மருத்துவர்களின் ஆலோசனைக்கமைய சிறியதொரு சத்திரசிகிச்சை மூலம் அவரது உபாதை சரிசெய்யப்பட்டுள்ளது. எனவே அவர் தற்போதைய ஐ.பி.எல். தொடரில் உடனடியாக கலந்துகொண்டு விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவருக்குப் பதிலாக டெல்லிக்கு எதிரான ஆட்டத்தில் மயங்க் அகர்வால் அணியை வழிநடத்தியிருந்தார். ஒரு வார ஓய்வுக்குப் பின்னர் ராகுல் தனது வழமையான பணிகளை மேற்கொள்ளலாம் என்று மருத்துவர்கள் தெரிவித்திருப்பதால் ராகுல் மீண்டும் அணிக்குத் திரும்பும் வாய்ப்பு காணப்படுகிறது.

29 வயதான லோகேஷ் ராகுல் இந்த ஐ.பி.எல். சீசனில் ஏழு போட்டிகளில் விளையாடி 4 அரைச்சதங்களோடு 331 ஓட்டங்களை எடுத்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ராஜஸ்தான் அணி 55 ஓட்டங்களால் வெற்றி!

ஐ.பி.எல். 2021 கிரிக்கெட் தொடரில் நேற்று மாலை டெல்லியில் நடந்த 28 ஆவது லீக் ஆட்டத்தில் முன்னாள் சாம்பியன் ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணி, ராஜஸ்தான் ரொயல்சை எதிர்கொண்டது. ஹைதராபாத் அணியின் கப்டன் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்ட டேவிட் வோர்னருக்கு அணியிலும் இடம் வழங்கப்படவில்லை.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஹைதராபாத் அணி முதலில் ராஜஸ்தானை துடுப்பெடுத்தாட அழைத்தது. களமிறங்கிய ராஜஸ்தான் அணி, 20 ஓவர்களில் 220 ஓட்டங்களை மூன்று விக்கெட்டுக்களை மட்டுமிழந்து சேர்த்தது. ஜோஸ் பட்லர் 64 பந்துகளில் 124 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

பதிலளித்து விளையாடிய ஹைதராபாத் அணியால் 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது. மனிஸ் பான்டே 31 ஓட்டங்களைப் பெற்றார். ராஜஸ்தான் அணியின் முஸ்டபிசுர் ரஹ்மானும் கிறிஸ் மொறிசும் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

போட்டியின் நாயகனாக ஜோஸ் பட்லர் தெரிவானார்.

# இலங்கை - பங்களாதேஷ் டெஸ்ட் தொடர் வென்று கொடுத்தார் பிரவீன் ஜெயவிக்ரம

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரை இலங்கை அணி 1- 0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. இன்று நிறைவடைந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 209 ஓட்டங்களால் இலங்கை அணி வெற்றிபெற்றதன் மூலம் தொடரைத் தனதாக்கியது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இன்னிங்சில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 493 ஓட்டங்களைப்பெற, பதிலளித்து தனது முதல் இன்னிங்சை விளையாடிய பங்களாதேஷ் அணி 251 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இரண்டாவது இன்னிங்சில் வேகமாக ஓட்டங்களைப் பெற்று சவாலான இலக்கை நிர்ணயிக்க எண்ணிய இலங்கை அணி, ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 194 ஓட்டங்களைப் பெற்ற வேளையில் தனது இன்னிங்சை நிறைவுசெய்து பங்களாதேஷ் அணியைத் துடுப்பெடுத்தாட அழைத்தது.

இரண்டாவது இன்னிங்சில் 227 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்த பங்களாதேஷ் அணி, 209 ஓட்டங்களால் தோல்வியடைந்துள்ளது. இந்தப் போட்டியில் தனது டெஸ்ட் அறிமுகத்தை மேற்கொண்ட இலங்கையணியின் 22 வயது இடதுகை சுழல் பந்துவீச்சாளர் பிரவீன் ஜெயவிக்ரம, முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியிருந்தார். போட்டியின் நாயகனாக அவரும் தொடர் நாயகனாக அணித்தலைவர் திமுத் கருணாரத்னவும் தெரிவானார்கள். இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றிதோல்வி இன்றி முடிவடைந்திருந்தது.



# ஐ.பி.எல்.2021 தொடரையும் ஊடுருவும் கொரோனா தொற்று

ஐ.பி.எல். 2021 கிரிக்கெட் தொடர் விறுவிறுப்பான கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. தொடரின் இன்றைய ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணியும் மோதவிருந்த நிலையில், கொல்கத்தா அணியில் விளையாடும் தமிழக வீரரான வருண் சக்ரவர்த்தி மற்றும் கேரளாவைச் சேர்ந்த சந்தீப் வாரியர் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டு இருப்பதாக செய்தி வெளியாகியிருந்தது.

கொல்கத்தா அணி வீரர்கள் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதால் இன்று நடைபெறவிருந்த போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பி.சி.சி.ஐ. அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

ஐ.பி.எல். போட்டியில் விளையாடும் வீரர்கள் கடுமையான 'பயோ' பாதுகாப்பு வளையத்தில் உள்ளனர். இதையும் மீறி வீரர்கள் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டு இருப்பது பலருக்கும் வியப்பினை ஏற்படுத்தியிருக்கிறது. சில தினங்களுக்கு முன்னர் தனது தோளில் ஏற்பட்ட காயத்தினை ஸ்கான் செய்வதற்காக வருண் சக்கரவர்த்தி, 'க்ரீன் சனல்' எனப்படும் பாதுகாப்பு ஏற்பாட்டினூடாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தார். அப்போது அவருக்கு தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்றும் அவரிடமிருந்து சந்தீப்புக்கு தொற்றியிருக்கலாமென்றும் நம்பப்படுகிறது. ஐ.பி.எல்.2021 தொடர் ஆரம்பித்த பின்னர் அணிகளில் விளையாடும் வீரர்களுக்குத் தொற்று ஏற்படும் முதல் சந்தர்ப்பமாக இது அமைந்துள்ளது.

இதே வேளை, சற்று முன்னர் கிடைத்த தகவலின்படி சென்னை சூப்பர் கிங்ஸ் குழுவில் உள்ள மூவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிகிறது. அணியின் சி.இ.ஓ. வான கே.விஸ்வநாதன், பந்து வீச்சுப் பயிற்சியாளர் பாலாஜி மற்றும் வாகன துப்புரவு ஊழியர் ஒருவர் என தொற்றுக்குள்ளான மூன்று பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அணியின் வீரர்கள் யாருக்கும் தொற்று இல்லையென்பது உறுதியாகியுள்ளதால் சூப்பர் கிங்ஸ்ஸின் அடுத்த போட்டி தடையின்றி நடைபெறுமென பி.சி.சி.ஐ. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தொடர் ஆரம்பமானபோது ஐந்து நாட்களுக்கு ஒரு தடவை அணியினருக்கு மேற்கொள்ளப்பட்ட கொரோனாப் பரிசோதனை, பின்னர் மூன்று நாள்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்பட்டு இப்போது இரு தினங்களுக்கொரு தடவை நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுறுத்தலுக்கு முடங்கியிருக்க முடியாது வளங்களை ஒருங்கிணைக்க வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



எமது பிரதேசத்தின் வளங்கள் நாட்டின் பொருளாதாரத்துக்கான அடிப்படைகளாக ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எம்மை நோக்கி வருகின்ற அச்சுறுத்தல்களில் இருந்து எம்மையும் எம்சார்ந்தவர்களை பாதுகாப்பது தொடர்பான அறிவுசார் சிந்தனைகளோடு முன்னோக்கி நகர வேண்டுமே தவிர, முடங்கி இருக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

கொரோனா பரவல் தொடர்பான அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் இறுக்கமான சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பூநகரி பிரதேச செயலகத்தில்நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற கடற்றொழிலாளர் சார் கலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பூநகரி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கடற்றொழில்சார் விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்ட குறித்த கலந்துரையாடலில் -

கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிகள் கலந்து கொண்டு தமது தேவைகள் மற்றும் சீர்செய்யப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக கருத்துக்களை முன்வைத்தனர்.

குறிப்பாக, இரணைதீவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் உருவாக்கப்பட்டுள்ள கடலட்டை ஏற்றுமதிக் கிராமம், மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ள நிலையில், ஏனைய சங்கங்களாலும் கடலட்டை பண்ணை அமைப்பதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இதுதொடர்பாகக் கவனம் செலுத்திய கடற்றொழில் அமைச்சர். கடலட்டைப் பண்ணை அமைப்பதற்கு பொருத்தமான இடங்களை அடையாளம் செய்து தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

அதேபோன்று, கடற்றொழில் நடவடிக்கைகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் இன்னோரன்ன தேவைகள் தொடர்பாகக் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தெடர்பாகவும் ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 7 முதல் 8 சதவீதமான தொற்றாளர்கள் பி.சி.ஆர். பரிசோதனைகளில் அடையாளம்

கொழும்பு, மே 03

இலங்கையில் நேற்று(ஞாயிற்றுக்கிழமை) ஆயிரத்து 891 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளில் 7 தொடக்கம் 8 சதவீதமான தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர் என தொற்று நோயியல் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் தொற்றுக்கு இலக்கானவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 753 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் 764 பேர் தொற்றிலிருந்து குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய, குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 97 ஆயிரத்து 848 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றைய தினம் கொரோனா வைரஸ் தொடர்பான மேலும் 09 மரணங்கள் பதிவாகியுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதி செய்துள்ளார்.

இதற்கமைவாக இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 687 இல் இருந்து 696 ஆக அதிகரித்துள்ளது.

# அடுத்த மாதம் இலங்கை வருகிறாரா சீன வெளியுறவுத் துறை அமைச்சர்?

சீன வெளியுறவு அமைச்சர் வாங்யி அடுத்த மாதம் இலங்கைக்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது அண்மைய மாதங்களில் சீனாவிலிருந்து மூன்றாவது மூத்த உத்தியோகபூர்வ நிலை பயணமாக அமையவுள்ளது.

ஏற்கனவே சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஃபெங் கடந்த வாரம் நாட்டிற்கு வந்து ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் பேச்சு நடத்தினார்.

இதன்போது பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த இரு நாடுகளும் இணக்கம் வெளியிட்டிருந்தன.

கடந்த ஆண்டு சீன கம்யூனிஸக் கட்சியின் மத்திய குழுவின் அரசியல் பணியக உறுப்பினரும், மத்திய குழுவின் வெளியுறவு ஆணையத்தின் அலுவலக இயக்குநருமான யாங் ஜீச்சியும் கொழும்பில் இருதரப்பு கலந்துரையாடல்களுக்காக வருகை தந்தார்.

இந்த நிலையில் சீன வெளியுறவு அமைச்சர் வாங் தனது பிராந்திய பயணத்தின் ஒரு பகுதியாக இலங்கைக்கு வரவுள்ளார்.

# 5 மாவட்டங்களின் சில பகுதிகள் உடன் முடக்கப்படுகின்றன

உடன் அமுலுக்கு வரும் வகையில் நாட்டின் ஐந்து மாவட்டங்களின் 8 கிராம சேவகர் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளன.

இந்த விடயத்தை இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

இதன்படி, நுவரெலியா மாவட்டத்தின் - ஹங்குராங்கெத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரத்மட்டிய கிராம சேவகர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் பாணந்துறை தெற்கு பொலிஸ் அதிகாரப் பிரிவுக்குட்பட்ட நாரம்பிட்டிய, பின்வத்த மேற்கு கிராம சேவகர் பிரிவுகளும், பண்டாரகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்டாரகம கிழக்கு கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் கொழும்பு மாவட்டத்தின் பாதுக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உக்கல கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் திஸ்ஸவீரசிங்கம் சதுக்கம் கிராம சேவகர் பிரிவு தனிமைப் படுத்தப்பட்டுள்ளது.

மேலும், கம்பஹா மாவட்டத்தில் வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்விஸ்வத்த பகுதி கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

# நாடு திரும்பியவர்கள் 48 பேருக்குத் தொற்று

**வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பிய மேலும் 48 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.**

**இந்நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை ஒரேநாள் பாதிப்பு ஆயிரத்து 891 ஆகப் பதிவாகியுள்ளதுடன் இதுவே நாட்டில் அதிகூடிய ஒரேநாள் பாதிப்பாகும். இதன்படி, இலங்கையில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 753ஆக அதிகரித்துள்ளது.**

# கொவிட் மூன்றாம் அலையில் உருமாறிய வைரஸ் பரவுகிறது

## ஆரோக்கியமானவர்களுக்கும் மரணம் ஏற்படும் ஆபத்து

கொவிட் வைரஸின் மூன்றாவது அலையில் பரவும் உருமாறிய வைரஸ் திரிபு தொற்றால் ஆரோக்கியமாக இருக்கும் நபருக்கும் மரணம் ஏற்படக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கொவிட் வைரஸின் முதலாம் மற்றும் இரண்டாம் அலைகளில் மரணமானவர்கள் பல்வேறு வகையான நோய்களைக் கொண்டிருந்த நபர்கள் என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விசேட மருத்துவ நிபுணர் உபுல் திஸாநாயக்க கூறியுள்ளார்.

எனினும் இம்முறை எந்த நோய்களும் இல்லாத இளையவர்களுக்கு வைரஸ் தொற்றி, சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டு உடனடியாக இறக்கும் சந்தர்ப்பங்களும் இருக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கையில் நாள்தோறும் பதிவாகும் கொவிட் தொற்றுக்கு இலக்கான நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

அந்த வகையில் நேற்று ஞாயிறு அதிகூடிய கொவிட் நோயாளர்கள் பதிவாகியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருந்ததி

**+94 777 164 524**
**www.arunthathee.com**

## இணைய திருமண சேவை

## மணமகன் விபரம்

**18376|வே|1982**
மாவிட்டபுரம்|இந்து|யாழ்
168 செ.மீ |பட்டதாரி
Procurement Officer|
சதயம் (கும்பம்)

**18328|வே|1983**
வயாவிளான்|இந்து|யாழ்
170 செ.மீ |சூ.செ:10
Technician
அத்தம்(கன்னி)|உயர்தரம்

**18484|வே|1984**
நல்லூர்|இந்து|Uk
178 செ.மீ|செ.வ் : 04
Customer Assistant
மகம் (சிம்மம்)|டிப்ளோமா

**18843|வே|1984**
புங்குடுதீவு|Divorced|UK
169 செ.மீ |டிப்ளோமா
Owner of petrol Station
சித்திரை (துலாம்)|செ: 01

**18780|வே|1984**
கொழும்பு|இந்து
180 செ.மீ |யாழ்ப்பாணம்
Environmental Officer|
பூனர்பூசம் (மிதுனம்)

**17823|வே|1985**
சாவகச்சேரி|இந்து
170 செ.மீ|செவ் :07
Business|Swis|உயர்தரம்
மிருகசீரிடம்(ரிஷபம்)

**18741|வே|1985**
கொடிகாமம்|இந்து
177 செ.மீ| செ: 01
System Analysist
விசாகம்(துலாம்) |பட்டதாரி

**18535|வே|1986**
மாவிட்டபுரம்|இந்து|Divorced
185 செ.மீ |செவ் :04
Operation Manager|Au
கார்த்திகை (ரிஷபம்)|பட்டதாரி

**18550|வே|1986**
பருத்தித்துறை|இந்து|Ch
175 செ.மீ|செ.வ் :12
Software Architect|Div
பூரம் (சிம்மம்) |பட்டதாரி

**18553|வே|1987**
காரைநகர்|இந்து
178 செ.மீ |US
Senior Network Engineer
விசாகம் (துலாம்)|பட்டதாரி

**18010|வே|1988**
சுழிபுரம்|இந்து|UAE
201 செ.மீ |செவ்: 08
Incharge| பட்டதாரி
அத்தம் (கன்னி)

**18834|வே|1988**
யாழ்நகரம் |இந்து|கண்டி
183 செ.மீ|டிப்ளோமா
Managing Directer
ரேவதி (மீனம்)|டிப்ளோமா

**18750|வே|1989**
நல்லூர்|இந்து|France
180 செ.மீ |செ : 04
Shop owner|டிப்ளோமா
திருவாதிரை (மிதுனம்)

**18070|கோ |1989**
கரவெட்டி|இந்து|Canada
சூ.செ :05| Surveyor
163 செ.மீ |பட்டதாரி
மிருகசீரிடம் (ரிஷபம்)

**18379|வே|1990**
அளவெட்டி|இந்து|யாழ்
182 செ.மீ|செவ் : 07
Engineer|பட்டதாரி
சுவாதி (துலாம்)

**18696|வே|1990**
காரைநகர்|இந்து
171 செ.மீ |பட்டதாரி
Qs |Oman
பூரட்டாதி (கும்பம்)

**18840|வே|1991**
மூளாய்|இந்து|கொழும்பு
180 செ.மீ |செவ் :02
IT Consultant|பட்டதாரி
பரணி (மேடம்)

**18816|வே|1991**
கொழும்பு|இந்து
169 செ.மீ|
Assistant Manager
புனர்பூசம் (மிதுனம்)

**18388|வே|1991**
நல்லூர்|இந்து|AU
166 செ.மீ |செவ்: 07
Engineer
பட்டதாரி|
திருவாதிரை (மிதுனம்)

**18511|வே|1991**
நல்லூர்|இந்து|கொழும்பு
165 செ.மீ|பட்டதாரி
Software Engineer
உத்திரட்டாதி(மீனம்) |சூ.செ:08

**18837|வே|1993**
காரைநகர்|இந்து|கொழும்பு
179 செ.மீ|செ.வ் : 08
Software Engineer|பட்டதாரி
அவிட்டம் (மகரம்)

**18819|கோ|1985**
தெல்லிப்பளை|இந்து|UK
177 செ.மீ |சூ.செ:05
Business பரணி(மேடம்)
பட்டதாரி

**18852|நா|1993**
கொழும்பு |இந்து
155 செ.மீ |செவ் :12
Civil Engineer& manager
மகம் (சிம்மம்) | பட்டதாரி

**18861|வே|1995**
கொழும்பு|இந்து|
180 செ.மீ|பட்டதாரி
Civil Engineer
அனுஷம் (விருச்சிகம்)

## மணமகள் விபரம்

**18568|வே|1983**
கொழும்பு |கிறிஸ்தவம்
160 செ.மீ |சூ .செ :02
Manager at Bank
சித்திரை(கன்னி) |பட்டதாரி

**18714|வே|1985**
திருநெல்வேலி|இந்து|Col
Assistant production
manager|Divorced
உத்திரட்டாதி (மீனம்)|பட்டதாரி

**18610|வே|1986**
வட்டுக்கோட்டை|இந்து| யாழ்
162 செ.மீ |கி.பா : 11
Senior Accountant
பூரம் (சிம்மம்) | பட்டதாரி

**15266|வே|1986**
வட்டுக்கோட்டை|இந்து|Col
170 செ.மீ |Assistant
Accountant|டிப்ளோமா
அஸ்வி னி (மேடம்)

**18747|வி|1986**
கொழும்பு|இந்து
160 செ.மீ |செவ் :02
Engineer|பட்டதாரி
பரணி (மேடம்)

**18726|வே|1987**
புங்குடுதீவு|இந்து|கொழும்பு
Div| 151 செ.மீ|செ.வ் : 07
சுவாதி (துலாம்)
உயர்தரம்

**18601|வே|1988**
வேலணை|இந்து|கொழும்பு
153 செ.மீ |டிப்ளோமா
Account Assistant
ரேவதி (மீனம்)

**18678|வே|1989**
சுன்னாகம்|இந்து|யாழ்
160 செ.மீ |சூ.செ : 05
Junior Executive at Bank
பூராடம் (தனுசு) |பட்டதாரி

**18828|வே|1990**
மயிலிட்டி|இந்து|canada
Immigration Officer
திருவாதிரை (மிதுனம்)
பட்டதாரி| 160 செ.மீ

**18481|வே|1990**
நயினாதீவு|இந்து|கொழும்பு
156 செ.மீ |செ.வ் : 12
Legal Officer|பட்டதாரி
அனுஷம் (விருச்சிகம்)

**18574|வே|1991**
மானிப்பாய்|இந்து|யாழ்
155 செ.மீ |செவ் :08
Teacher (Training-A/L Bio)
பரணி (மேடம்) |பட்டதாரி

**18873|வே|1992**
மன்னார்|இந்து|
158 செ.மீ|பட்டதாரி
Assistant Director Of Planning
பூராடம் (தனுசு)

**14868|வே|1992**
இளவாலை|இந்து| யாழ்
170 செ.மீ |Doctor
பட்டதாரி
திருவாதிரை (மிதுனம்)

**18732|வே|1992**
வேலணை|இந்து
153 செ.மீ |செவ் :02
Teacher|டிப்ளோமா
விசாகம் (துலாம்)

**14766|வே|1993**
கல்வியங்காடு|இந்து|யாழ்
154 செ.மீ|கி.பா : 30
Medical Student
மிருகசீரிடம் (ரிஷபம்)

**18813|வே|1993**
நல்லூர்|இந்து|கொழும்பு
156 செ.மீ |செவ் : 12
Engineer | பட்டதாரி
அனுஷம் (விருச்சிகம்)

**18765|கோ|1993**
பருத்தித்துறை|இந்து|யாழ்
162 செ.மீ |செவ் :12
Final year Student
மிருகசீரிடம் (மிதுனம்)

**18825|வே|1993**
கரணவாய்|இந்து| கொழும்பு
160 செ.மீ|செ.வ் : 08
Software Engineer|பட்டதாரி
திருவோணம் (மகரம்)

**18385|வே|1993**
திருநெல்வேலி |இந்து
152 செ.மீ |யாழ்
Designer|டிப்ளோமா
விசாகம்(துலாம்)

**18879|ந|1994**
யாழ்நகரம்|கிறிஸ்தவம்
162 செ.மீ |செவ் :04
Software Engineer
கார்திகை(ரிஷபம்)|பட்டதாரி

**14640|வே|1994**
மாவிட்டபுரம்|இந்து|Uk
152 செ.மீ|செ.வ் : 07
Project Manager
பூரம் (சிம்மம்)|பட்டதாரி

**18768|வே|1997**
வட்டுக்கோட்டை|இந்து
159 செ.மீ |கொழும்பு
திருவாதிரை (மிதுனம்)
பட்டதாரி|Student

**18382|பண்|1997**
உருததிரபுரம்|இந்து
183 செ.மீ |டிப்ளோமா
Operation Executive
புசம் (கடகம்)

**18759|வே|1997**
காரைநகர்|இந்து|யாழ்
158 செ.மீ|செ.வ் : 01
Medical Student
|மிருகசீரிடம் (ரிஷபம்)



தற்பொழுது விற்பனையில்
அரச தனியார் தொழில் புரியும் உள்நாட்டு,
வெளிநாட்டு 600 மணமக்கள் விபரங்களுடன்
அருந்ததி திருமண இதழ் 23
இணையத்தில் வாசிக்க
www.rebrand.ly/i23

உங்களுக்கு பொருத்தமான வரனின் பதிவு இலக்கத்தை
(Profile No) Whatsapp 94777164524 இற்கு அனுப்பி
குறித்த வரனின் முழுமையான விபரத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.05.2021இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org